**வெற்றிலையில மாலை கட்டுங்க மாலை கட்டுங்களேன்**
**வீர மாருதியை போற்றி போற்றி மாலை கட்டுங்களேன்**

துளசி இலை கொழுந்தெடுத்து கோர்த்து கட்டுங்களேன்
ராம தோத்திரத்தை சொல்லி சொல்லி மாலை கட்டுங்களேன் (வெற்றிலை)

**கோடி பணம் கேட்டதில்லை மாருதி ராஜா அவன்**
**கொட்டும் பனி நேரத்திலும் பூத்திடும் ரோஜா**
**ராம ஜெயம் சொன்னீங்கன்னா வந்து நிற்பானே தினம்**
**ராம நாத சாமி பேரை பாடி நிற்பானே (வெற்றிலை)**

**பொட்டு வச்சு பட்டு வச்சு பூஜை செய்தாலே அவன்**
**எட்டு வச்சு வாசக்கதவை தட்டிடுவானே**
**மெட்டெடுத்து ராமனுக்கு பாட்டெடுத்தாலே அவன்**
**மெல்ல வந்து தாளமிட்டு கேட்டிடுவானே (வெற்றிலை)**

**ஆதரிக்கும் நெஞ்சுக்குள்ளே பூத்திருப்பானே**
**பொன் அந்தியிலே பூத்த மல்லி போல் சிரிப்பானே**
**பட்ட மரம் போலிருக்கும் வாழ்கை எல்லாமே அவன்**
**சொட்டு சொட்டாய் தேன் வழிய மாற்றி வைப்பானே (வெற்றிலை)**

**சந்தனத்தை பூசி வைத்த பொன் நிற மேனி அவன்**
**சாத்திரமாய் வேதமெல்லாம் மிஞ்சிய ஞானி**
**வட்ட நிலா பூத்தது போல் பூ முகம் பாரு அவன்**
**வானரத்தின் தலைவனம்மா வந்தனம் கூறு (வெற்றிலை)**